# மலைபடுகடாம் கூறும் இசைச் சிறப்பு

முனைவர். இரா. சீதாலஷ்மி சுப்ரமணியன்

இசையியலாளர்

ஈமெயில்: seethe.teja@gmail.com

ஆய்வு நோக்கம்:-

சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில் நம் பழங்கால வாழ்வியல் முறையில் மக்கள் எவ்வாறெல்லாம் இசையை வாழ்நாளில் பயன்படுத்திக்கொண்டனர் என்றும் எத்தனை விதமான கருவிகள் கொண்டு பாணர்கள் எனும் இசைக் கலைஞர்கள் கலையை செழிக்கச் செய்தனர் என்பதை பற்றியும் கூறும் விதமாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

ஆய்வுச் சுருக்கம் :-

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தறாற்றுப்படை என்னும் ஐந்து ஆற்றுப்படைகளில், மலைபடுகடாம் எனப்படும் கூத்தராற்றுப்படையில் காணப்படும் இசைச் செய்திகள் பற்றிய கருத்துக்களை கொண்டுளதாக அமைந்துள்ளது இக்கட்டுரை.

‘மலைபடுகடாம்’ என்னும் இந்நூலுக்கு ‘கூத்தராற்றுப்படை’ என்றொரு பெயரும் உண்டு ஆற்றுப்படையுள் பெரியது. 583 அடிகளைக் கொண்டு;ளளது. நன்னன் சேய் நன்னனை இரணிய முட்டத்துப் பெருங்குன்றாகப் பெருங்கௌசிகனார் பாடியது. இதில் கூத்தர்கள் இசைக் கருவிகளுடன் செல்லுதல், பெரிய யாழின் வருணனை ஆகியன இசைப்பற்றிய செய்திகளாக அறியமுடிகிறது.

முழக்குக் கருவிகள் பற்றிய இந்நூல்தரும் குறிப்புகள் :

பண்ணமைத்துத் திண்வார் விசித்தமுடிவு

முடிவொடு ஆகுளி ஒன்றல்

நுண்ணறிக் குற்ற விளங்கடர் பாண்டில்

நடுவு நின்று இசைக்கும் அரிக்குரல்தட்டை

கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி

அரஞ்செல் கோடியர் முழவின் தூங்கி

மான்தோல் சிறுபறை

கல்யாறு ஒலிக்கும் விடர் முழங்கு இரங்கிசை

ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும் கிளிகடி மகளிர் விளிபடு பூசல்

பன்றிப்பறை

மண்கணை முடிவு

மழைஎதிர் படுகண் முடிவுகண் இருப்ப

ஆகிய வரிகளில் முரசு, முடிவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதில் இடம்பெறும் முடிவு வகைகளுக்கான குறிப்புகள் முன்பே பார்த்து வந்துள்ளோம்.

இந்நூலில் உளதுகருவிகளும் அதன் உருப்புக்களும் தரப்பட்டுள்ளன.

இளிபயிர் இமிரும் குறுபரம் தூம்பொடு

விளிப்பது கவரும் தீங்குழல்

பரகின் குரல்வார்ந் தன்ன நுண்துளை

சிலம்பமை பந்தல்

இலங்குதுளை செறிய ஆணி

புதுவது போர்த்த பொன்போல் பச்சை

வணர்ந்து ஏந்து மருப்பு ஆகிய வரிகள் இசைக்கருவிகளைக் குறிக்கின்றன. மேலும் இசை பற்றிய செய்திகளில் மருதப்பண், பைதீர்பாணர், தினைகுறுமகளிர், ஆகிய இசைச்செய்திகள் காணக்கிடைக்கின்றன.

மேலும் யாழ் பற்றிய பல செய்திகளை மலைபடுகடாம் நமக்குப் பகர்கின்றது. யாழின் உருப்பான ‘உந்தி’ பற்றி இந்நூல் குறிப்பிடுகிறது. வளைக்கோட்டுயாருக்கு உந்தி தேவையில்லை. நரம்புகள் நேரே வளைக்கோட்டோடு இழுத்துக் கட்டப்படும்.

மேலும் மருப்பு நேராக இருந்ததாலே நரம்புகள் தேய்த்தும்; வழுக்கியும் வாசிக்கப்பட்டன. நேர்கோட்டு யாழில் மட்டுமே இவ்வாறு வாசிப்பு இயலும்.

யாழின் உருப்புகளாக பத்தல், வறுவாய், யாப்பு, பச்சை, போர்வை, மருப்பு திவ்வு, துரப்பு அமை ஆணி, நரம்பு முடுக்கும் ஆணி, பண் நரம்பு, மாடகம் வணர்கோடு ஆகியன கூறப்பட்டுள்ளன.

வளையல் முன்பின் திரிவது போன்று திவ்வுகள் திரியும் என்றதால் நேர் கோட்டில் தொடிகள் முன்பின் அசைந்தன என்றறியலாம்.

திவவுகள் சுரத்தானங்களில் மருப்பினைச் சுற்றிக் கட்டப்படுவன. நேர்கோட்டு மருப்பில்தான் திவவுகள் கட்டப்படுகின்றன. வளைவு கோட்டுயாழில் ஒவ்வொரு இசை நரம்பும் ஒரு சுரத்தானத்துக்கு வளைகோட்டில் கட்டப்பட்டன. எனவே பேரியாழிலும் சீறியாழிலும் அரத்தானத்தில் கட்டப்பட்ட திவவுகள் இருந்தன. எனவே மேற்கூறப்பட்ட இரண்டு யாழும் நேர்கோட்டுயாழேயாகும்.

செங்கோட்டியாழிலும் சகோடயாழிலும் நரம்பு முடுக்கும் ஆணிப்பெட்டியாகிய மாடகம் இருப்பதால் இவையும் நேர்கோட்டு யாழ் என்று உறுதியாகிறது. இந்த மாடகம் பேரியாழிலும் சீறியாழிலும் இடம்பெறவில்லை. ஆயினும் அவற்றின் நேர்கோட்டிலே திவவுகள் சுரத்தானங்கள் நிறுத்தப்பட்டமையால் நேர்கோட்டி யாழ்களே மாட அமைப்பு இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் இரண்டாவது நூற்றாண்டை ஒட்டிக் குறிப்பிடப்படுகிறது.

பத்தல் :- இது குடத்தின் அடிப்பாகம் போன்றது. இதன் உள்ளே வெற்றிடம் கொண்டதை வறுவாய் என்றனர். மருப்பின் மீது நரம்புகள் கட்டப்பட்டுள்ளன. அவை மருப்பு மீமிசை வழியாக மாடகம் வரை

செல்லும். மருப்பு என்பது நீண்ட தண்டு. இதன் மீது பண் நரம்புகள் செல்லும். நரம்புதானங்களில் மருப்பில் திவ்வுகள் கட்டப்பட்டிருக்கும் இது பண்டைய செங்கோட்டி யாழின் சுருக்கமான விளக்கம் ஆகும்.

பத்தல், வயிறு, அகளம், அகடு, கலம் ஆகிய சொற்கள் ஒரு பொருள் தருவன. இது நரம்போசையை எதிர்ஒலிப்பதற்காகவே கண்டுபிடித்து அமைக்கப்பட்டது. அகடு என்னும் சொல் மலைபடகடாமில் வருகிறது. 'அகடு சேர்புபொருந்தி அளவினில்' (33டுiநெ)

வறுவாய் :- இது குடம் போன்ற பத்தலின் உள்ளே இருக்கும் வெற்றிடம் வறுௗவாய். ஒன்றுமில்லை வெற்றிடத்தை சுட்டுதாக இச்சொல் அமைந்தது.

யாப்பு :- இலங்குதுணை செறிய ஆணி முடுக்கிப் புதுவது புணைந்த வெண்கை யாப்பமைத்துப் புதுவது புனைந்த பொன்போல் பச்சை"
(மலைபடுகடாம் -27-29)

யானையின் வெள்ளை நிறக்கொம்பால் செய்யப்பட்ட சக்கைகளாகிய இந்த கைகளால் பத்தரின் வாயைக் குறுக்கே மூடுவார்கள். இதுவே யாப்பு எனப்பட்டது. தொடக்க காலத்தில் மரச் சக்கைககாச் சேர்த்து வைத்துப் பசையால் ஒட்டிச்செய்யப்பட்டது யாப்பு. பின்னர் யானைக்கொம்புச் சக்கைகளால் யாப்பை அமைத்தனர்.

பத்தலின் பாயை மூடும் யாப்பினை வீட்டை மூடும் வெட்டுக்கை போன்றன எனலாம். யானையின் வென் கொம்பால் இசை செய்யப்பட்டன என்று மலைபடுகடாமும் அதன் கூறுகின்றன.

பச்சை : பச்சை என்பது பத்தரின் யாப்பினை மூடிய மெல்லிய ஒருவகை தோல். இந்தத் தோல் இல்லையெனில் பத்தல் வாயிலை மூடப்பட்ட யாப்பு எதிர் ஒலிக்க இயலாது. பச்சை என்பது போர்வைத் தோலின் நிறமூட்டப் பெற்ற பகுதியாகும்.

மேலும் யாப்பு பற்றிய குறிப்புகளில் 'யானைக் கொம்பு'எனும் யாப்பினை மலைபடுகடாம் ஆசிரியர் மட்டுமே குறிப்பிடுகிறார். பத்துப்பாட்டினுள் பிற நூலாசிரியர் கூறவில்லை.

யானைக்கொம்பு பயன்படுத்தியதற்கு முன்னர் மரப்பலகையை பயன்படுத்தினார்கள். 'மரத்தைப் பொதிந்து' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். மரப்பலகை இல்லையேல் வெறும் தோலால் மூடியதன் மேல் உந்தி யானது செறிவாக நிற்க முடியாது. உந்திமேல் பண் நரம்புகள் அழுத்திக் கொண்டு செல்லும்போது அதனை நெகிழ்ச்சி யடையாது தாக்க யாப்பு மிக முக்கியமாகிறது. உந்தியைத் தாங்கி நிலையாக்கித் தருவது இந்த யாப்பேயாகும்.

உந்தி : அகடுசேர்பு பொருந்தி அளவினில் திரியாக கவடுபடு அவைஇய சென்று வாங்கு உந்தி"

மலைபடு 33-4

யாழின் நரம்புகளில் இன்னோசை பெருக்குகின்ற இன்றிமையாத உறுப்புகளுள் ‘உந்தி’ என்பது மிக முக்கியமானதாக உள்ளது. இதனை இன்று திதிரை என்கிறோம். இது சதுரமாக உயரமாக உந்திக்கொண்டு இருப்பதால் உந்தி எனப்பெயர் பெற்றுள்ளது. இந்த உந்தி மேல் நரம்புகள் செல்வதால் ஓசை, தடைகள் இன்றிச் சென்று இன்னோசை வெளிப்படுகின்றன. இதன் வடிவினை மலைபடுகடாம் நன்கு விளக்கியுள்ளது.

இளஞ்சூல் கொண்ட பெண் வயிற்றில் நடுமேடு இருக்கும். இதுவே அகடுசேர்வு’ பெருந்திய இடம். இதுவே உந்திக்கு உரிய இடம்.

மருப்பு : மருப்பு என்பது தண்டு, கோடு தந்திரிகரம் எனவும் வழங்கப்படுகிறது. இது நீண்டு தண்டியாக இருப்பது. இது உட்குவிவாகக் குடைவாகச் செய்யப்பட்டு, ஒலியை எதிர் ஒலிப்பதற்கு பெரிதும் உதவுவது. திவ்வு என்னும் வார்க்கட்டுகள் இதனைச் சுற்றி சுரத்தானங்களில் கட்டப்பட்டிருக்கும். பத்தரோடு மருவி இருப்பதால் மருப்பு என்றும் உருண்டு தண்டியாய் இருப்பதால் தண்டு என்றும் உயர்ந்து நிற்பதால் கோடு என்றும் நரம்புகட்கு உரியதாய் கரம்போல் நீண்டு இருப்பதால் தந்திரிகரம் என்றும் பெயர் பெற்றது.

“நுணங்கா நுவறிய நுண்ணீர் மாமை களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின் வணர்ந்து ஏந்து மருப்பின் வள்உயிர்ப்பேரியாழ் மலைபடு 35-7

மருப்பு கருப்பு நிறம் கொண்டது. வளைந்து யாளியை ஏந்துவது. பெரிய ஓசை உடையது படுமலை பேரியாழை வர்ணிக்கிறது. இது வடிவில் பெரியதாகும். ஓசையும் மிகுந்து ஒலிக்கும். இதனுடைய சிறிய வடிவமே சீறியாழ் எனப்படும்.

வணர்ந்து ஏந்து மருப்பு : மருப்பின் தலைப்பாகத்தில் சற்று வளைந்து பின் யாளியை ஏந்திக் கொண்டிருக்கும். இது பேரியாழின் யாளியைத் தண்டிலே அமைத்துள்ள இடத்தை சுட்டுவது.

கருங்குரங்கின் கையைப் பாம்பு சுற்றிக்கொண்டது போல, கருமருப்பினை சுற்றி நிற்கும் திவவு என்றதாலும், பிற குறிப்பாலும் சீறியாழும் பேரியாரும் நேர்மருப்பு உடையன என்று அறிய முடிகிறது

முடிவுரை

இக்குறிப்புகள் மூலம் யாழின் உறுப்புகளைப் பத்தரில் உள்ளவை, மருப்பில் உள்ளவை எனப்பகுத்துக் கூறப்பட்டுள்ளன. மாடகம் என்னும் உறுப்பு பற்றி இளங்கோவடிகள் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். இது பற்றிப் பல ஆற்றுப்படைகள் குறிப்பிழடவில்லை. யாழின் உருப்புகளில் ஆணி என்பன நரம்புகளை முடுக்கும் ஆணிகளைக் குறித்தன.இன்று பிரடை என்று குறிப்பிடுகின்றனர்.

பத்தரின் விளிம்புகளில் தோலையும் அதனடியிலுள்ள யாப்பினையும் தைத்த சுள்ளாணிகள் உண்டு. பச்சை எனும் தோலால் யாப்பினைப் பொதுந்து மூடுவார்கள். யாப்பு, பத்தரை மூடிய செறிவான யானைக்

ISSN:2582-9599

கொம்பு பாளங்கள் இன்று நடைமுறையில் உள்ள வீணை பத்துப்பாட்டு நூல்கள் குறிப்பிடும் செங்கோட்டி யாழினின்றும் சிறிது முன்னேற்றம் பெற்றதே வீணையில் பத்தரில் வேலைபாடுகள் மூட்டுகள், ஓட்டுவகைகள், மாடக மூடி சிவன் வெங்கலக்கோல்கள், காடிச்சக்கை முதலியவை புது முன்னேற்ற அமைப்புகளாகஅறியமுடிகிறது.

பத்துப்பாட்டினுள் இசை பற்றிய பல்வேறு செய்திகளை அறிந்து கொள்ள ஏதுவாக தமிழிசை கலைக்களஞ்சியம், யாழ்வரலாறு, தென்னக இசை இயல் ஆகிய நூல்கள் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

சங்க இலக்கியங்களில் மேலும் பல நூல்களிலும் இசை பற்றிய செய்திகள் மிக அதிகமாக பொதிந்துள்ளது விரிவான ஆராய்ச்சிக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

*References*

தமிழிசை இலக்கிய வரலாறு - மு. அருணாச்சலம், கடவுப் பதிப்பகம்

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர். சி. பாலசுப்பிரமணியன்
மணமலர்ப் பதிப்பகம்

மலைபடுகடாம் மூலமும் உரையும் - டாக்டர். கதிர்முருகு - சாரதா பதிப்பகம்

http://wwwchennailibrary.com

Http://tamizharulagam.in

http://www.tamilsurangam.in

Www.saivam.org